# மெட்ரோ ரயிலில் கல்விப் பயணம் தொடங்கியது



சென்னை மெட்ரோ ரயிலில் வெள்ளிக்கிழமை கல்வி பயணம் மேற்கொண்ட அரசுப் பள்ளி மாணவிகள்.

சென்னை, ஜூன் 22: சென்னை மெட்ரோ ரயிலில் 2018-19-ஆம் கல்வி யாண்டுக்கான கல்விப் பயணம் வெள்ளிக்கிழமை தொடங்கியது.

சென்னை மெட்ரோ ரயில், மெட்ரோ ரயில் நிலையங்கள் உள்பட பல்வேறு சிறப்பு அம்சங்கள் தொடர்பாக மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், மெட்ரோ ரயிலில் கல்விப் பயணம் இலவசமாக செல்ல அனுமதி அளிக்கப்பட்டது.

இதில், மாநகராட்சி பள்ளிகள், அரசுப் பள்ளிகள், ஐ.சி.எஃப் பள்ளி மாணவ, மாணவிகள் நாள்தோறும் 300 பேர் வீதம் வாரத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை கல்விப் பயணம் செய்யலாம்.

அதன்படி, கடந்த கல்வியாண்டில் 19,500 மாணவ, மாணவிகள் கல்வி பயணம் செய்து, மெட்ரோ ரயில் தொடர்பான பல்வேறு விவரங்களை தெரிந்து கொண்டனர்.

இந்நிலையில், மெட்ரோ ரயிலில் 2018-19-ஆம் கல்வியாண்டுக்கான கல்விப் பயணம் வெள்ளிக்கிழமை தொடங்கியது. அரசுப் பள்ளியைச் சேர்ந்த 120 மாணவ, மாணவிகள் பயணம் செய்தனர்.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது: மெட்ரோ ரயில் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், இந்த கல்விப் பயணம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது. இதில், அரசு, மாநகராட்சி பள்ளி, ஐ.சி.எஃப் பள்ளி மாணவ மாணவிகள் இலவசமாக பயணம் செய்யலாம்.

இந்த ஆண்டு அரசுப் பெண்கள் கல்லூரி மாணவிகள் கல்வி பயணம் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாதாந்திர கல்வி பயணத்தைப் பொருத்தவரை, சென்ட்ரல்-விமானநிலையத்துக்கும், ஏஜி டி.எம்.எஸ்-விமான நிலையத்துக்கும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு இருக்கிறது. இந்த பயணத்தில் மெட்ரோ ரயில் நிலையம், மெட்ரோ ரயில் குறித்து விவரிக்கப்படும் என்றார் அவர்.